RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s237

# ஆழ்வார்கள் பக்திநெறியில் வைணவத் தத்துவங்கள்

உ. கருப்பத்தேவன் [அ, *]

[அ] ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Vainava Philosophy in Alwar's Bhathi pasuram

U. Karuppathevan

[a] Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021,Tamil Nadu, India

* Corresponding Author:
uk.thevar@gmail.com

Received: 04-01-2021
Revised: 13-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

In Alwars Bhathi norms, way, Rituals Vainavam has numerous metaphysical Religious Philosophy. 'Nalayira Thirya prabhatham' collection Songs contents explained Vainava philosophy, Vainava religious principles, Lord Perumal Worship etc, In this articles Vainava philosophy in Alwars Bhathi pasuram narrated the vainava philoshy with special reference of "Nalayira Thivya prabhantham."

**Keywords:** Vainavam, Nalayira Thivya prabhantham, Lord Perumal Worship, Alwars

## முன்னுரை

நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடியுள்ள பன்னிரு ஆழ்வார்களும் பக்திநெறியில் பரம்பொருள், உயிர், பிரபஞ்சம் மாயை, மோட்சம் ஆகிய வைணவத் தத்துவங்களைத் தமிழ் வைணவ நெறியில் சிறப்பாகப் புலப்படுத்திய பான்மையை ஆராய்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.

## நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களின் முக்கியத்துவம்

பன்னிரு ஆழ்வார்களும் பரம வைணவ பக்தர்கள் ஆவர். இதனை நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களின் தொகுப்புக்கள் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றன. இப்பாசுரங்களில் அவர்கள் பக்தியின் மேன்மையையே வலியுறுத்தியுள்ளனர். எனினும் பரம் பொருளாகிய இறை, உயிர், பிரபஞ்சமாகிய உலகம், மாயை, மோட்சம் ஆகியன குறித்த வைணவத் தத்துவச் சிந்தனைகள் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் இயற்கையாகவே யாதொரு முயற்சியும் இல்லாமல் இடம்பெற்றுள்ளன. ஆழ்வார்கள் எந்தவொரு சம்பிரதாயத்தையும் தோற்றுவிக்கவில்லை. ஆழ்வார்களுக்குப் பின்னர் தோன்றிய வைணவ ஆச்சாரியர்களே வைணவ சமயம் சார்ந்த பல்வேறு சம்பிரதாயங்களைத் தோற்றுவித்தனர். நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் பொதிந்து கிடக்கும் ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தைத் தோற்றுவித்த விசிஷ்டாத்துவைத தத்துவக் கொள்கைகளை2 மக்களிடையே பரப்பினார்.

பிற்காலத்தில் தோன்றி வைணவ பக்திப்புலவர்கள் பல்வேறு வைணவச் சம்பிரதாயங்களில் தீட்சை பெற்று தங்கள் சம்பிர தாயங்களின் தத்துவக் கோட்பாடுகளுக்கேற்றவாறு வைணவப் பக்தி இலக்கியத்தைப் படைத்து வைணவப் பக்திநெறியை வளர்த்துள்ளார்கள்.

இந்தியா ஓர் ஆன்மீக நாடாகும். இந்தியாவில் பண்டைக்காலம் முதல் துறவிகள், ரிஷிமுனிவர்கள், மெய்யுணர்வாளர்கள் ஆகியோர் 'பிரம்மஞானம்' பற்றிய தத்துவச் சிந்தனைகளைப் போதித்து வந்துள்ளனர். இதன் பிரதிபலனாகவே இந்துமதம், பௌத்தமதம், சமண மதம் போன்ற பல்வேறு மதங்கள் இந்தியாவில் தோன்றின.

இறையடியார்களாகிய புலவர்கள் தத்துவஞானிகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இறைவனாகிய திருமால்மீது ஆழ்ந்த பக்தியைச் செலுத்தி அவனது அற்புதமான குணவியல்புகள் குறித்தும், வியக்கத்தக்க இறைச் செயல்கள் குறித்தும் பாடும் அவர்களது பக்திப்பாடல்களில் இறை வனோடு தொடர்புடைய பல்வேறு ஆன்மீகச் சிந்தனைகள் இயல்பாகவே வெளிப்பட்டு நிற்கின்றன. ஆழ்வார்கள் இறைபக்தியில் தம் உள்ளங்களை ஆழ்த்தியிருந்த தருணங்களில் பக்திப் பரவசமான அவர்களுடைய இதய ஒலிகளில் எழுந்த பக்திப் பாசுரங்களின் தொகுப்பே நாலாயிர திவ்யப் பிரபந்தமாகும் இது வைணவப் பக்தி உலகில் புகழ்மிக்கதாகவும் விளங்குகின்றன.

'பக்தி' சார்ந்த பன்னிரு ஆழ்வார்களின் ஆன்மீகச் சிந்தனைகள் பிற்காலத்தில் தோன்றிய வைணவ ஆச்சாரியார்களின் கவனத்தை ஈர்த்தன. ஸ்ரீ நாதமுனி என்னும் வைணவ ஆச்சாரியார் முதன்முதலில் ஆழ்வார்களது பாசுரங்களைத் தொகுத்து 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்னும் நூலாக வெளியிட்டார். அப்பாடல்களின் சமயம் சார்ந்த ஆன்மிகக் கருத்துக்களை விமர்சனம் செய்வதற்கும் அவரே அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்தார்.3 ஸ்ரீ நாதமுனிக்குப் பின்னர் தோன்றி இராமானுஜர் போன்ற ஆச்சாரியார்கள் ஆழ்வார் களின் ஆன்மீகச் சிந்தனைகளுக்கு நல்லதொரு தத்துவ விளக்கங்களைக் கொடுத்து விசிஷ்டாத்துவைதக் கோட்பாடாக நிரந்தரம் செய்தனர்.

பன்னிரு ஆழ்வார்களின் வைணவ சமயம் சார்ந்த ஆன்மீகச் சிந்தனைகளைப் பரம்பொருள், உயிர், பிரபஞ்சம், மாயை, மோட்சம் எனத் தத்துவ விளக்கம் கொடுத்து ஆராய்வதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கும் போக்குமாகும்.

## பரம்பொருளாகிய இறைவன் (பரமாத்மா)

நான்மறைகளாகிய வேதங்கள் 'பிரம்மம்' எனக் கூறும் பரம்பொருளையே வைணவம் 'நாராயணன்' என்கின்றது. பரம்பொருளாகிய இறைவனிடம் காணப்படும் அனைத்து அருளிச் செயல்களும் குணங்களும் ஸ்ரீமந் நாராயணனிடமும் காணப்படுகின்றது. நாராயணனையே அனைத்திற்கும் மேலான பரம்பொருளாக ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் போற்றிப் பாடியுள்ளனர். இதனைப் பன்னிரு ஆழ்வார்களும் பொது நிலையில் விளக்கிப் பாடியிருப்பினும் நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மிகவும் சிறப்பு நிலையில் பாடியுள்ளனர்.

பன்னிரு ஆழ்வார்களுமே தங்களது வழிபடு தெய்வமான கிருஷ்ணனைப் பரப் பிரம்மமான விஷ்ணுவின் அவதாரம் என்றே காட்டியுள்ளனர். இந்த விஷ்ணுவே ஆதிஅந்தமில்லாத புருசோத்தமன் ஆவான். இவனே இந்த உலகமும் உலகத்திலுள்ள உயிரற்ற, உயிருள்ள பொருட்கள் ஆகிய அனைத்திற்கும் தோற்றம் பெறக் காரணமாக இருப்பவன் ஆவான். இவனே உலகத்தின் அனைத்துப் பொருட்களிலும் அந்தர்யாமியாக நின்று அவற்றை இயக்குகின்றான். இவன் உருவமாகவும் அருவமாகவும் இருக்கின்றான். திருமங்கையாழ்வார், "படைத்தல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்யும் நாராயணன், நீதியை உணர்த்துகின்ற வேதங்களின் சாரமாக இருக்கின்றான். அவனே அனைத்திற்கும் ஆதியாகவும் காரணமாகவும் இருக்கின்றான்" என்று பாடியுள்ளார்.

நாராயணன் சர்வவல்லமை படைத்தவன். சிவன், நான்முகன், தேவேந்திரன் ஆகிய மூன்று கடவுளர்களுக்கும் அவனே தலைவன். ஈடு இணையற்ற நாராயணனுக்கு உட்பட்டே பிரபஞ்சமும் உயிரினங்களும் அடங்குகின்றன என நம்மாழ்வார் பாடியுள்ளார். அப்பாசுரம் வருமாறு:

"தளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்

தனிரொளியிமையவர் தலைவனும் முதலா

யாவகை உலகமும் யாவரும் அகப்பட

நிலம் நீர் தீ கால் சுடரிரு விசும்பும்

மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க

ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும்

அகப்படக் கரந்து

ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்பெருமா

மாயனை யல்லது

ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே?"

பிரளய காலத்தில் எம்பெருமானாகிய நாராயணன் அனைத்தையும் தன் வயிற்றுள் அடக்கிக்கொண்டு, ஐம்பூதங்களையும் சூரியனையும் சந்திரனையும் தன் வயிற்றுள் மறைத்து ஆலிலைமீது ஒன்றுமறியாத மாயனாகப் பள்ளிகொண்டிருந்தான். அவனே 'மா தெய்வம்' என நம்மாழ்வார் கூறுகின்றார். இவ்வாறு கூறும் நம்மாழ்வார் நாராயணனை ஒளிமிக்க பரஞ்சோதியாகக் காணுகின்றார். "பரஞ்சோதி நீ பரமாய் நின் இகழ்ந்து பின் மற்றோர் பரஞ்சோதி இன்மையின்" என்பது அப்பாடலடிகளாகும்.

"பரம்பொருள் உயிருள்ள (சித்) மற்றும் உயிரற்ற (அசித்) பொருட்களில் அந்தர்மியாக இருக்கின்றான் என்பது விசிஷ்டாத் துவைதத்தின் முக்கியமான கோட்பாடாகும்" இக்கோட்பாட்டினை நம்மாழ்வார்,

"மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவும்

விண்ணுமாய் விரியும் எம்பிரானையே"

நம்மாழ்வார், நாராயணனின் பரம்பொருள் தன்மையைத் தம் பாசுரங்களில் விதந்து போற்றியுள்ளார். அவன் நான்முகன், சிவன் ஆகிய இவ்விரு தெய்வங்களுக்கும் அந்தராத்மாவாய், தானே திருமாலாய் இருந்து படைத்தல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களையுமே எம்பெருமானாகிய நாராயணனே செய்கின்றான்; மூன்று உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் பிரம்மா, திருமால், சிவன் என்னும் மூன்று உருவங்களில் நாராயணன் இருக்கின்றான். என் ஆன்மாவிற்குள் அந்தர்யாமியாக உருவம் தெரியாமல் இருப்பவனும் அவனே என்கின்றார் நம்மாழ்வார்.

திருமழிசையாழ்வார் ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என இறைவனின் பரத்துவ நிலையை விளக்குகின்றார். நான்முகன், முக்கண்ணன், இந்திரன் ஆகிய கடவுளர் களுக்கும் பரமபதத்தில் வாசம் செய்யும் நித்திய சூரியர்களுக்கும் ஸ்ரீமந் நாராயணனே தலைவன் ஆவான். இத்தெய்வங்களின் முடிவு காலத்தையும் இவனே நிர்ணயிக்கின்றான். இவனே பிரளய காலத்தையும் நிர்ணயம் செய்கின்றான் எனத் திருமழிசையாழ்வார் ஸ்ரீமந் நாராயணனைப் பரப்பிரம்மமாகக் காணுகின்றார். அப்பாடல் வருமாறு:

"தேருங்கால் தேவன் ஒருவனே

என்றுரைப்பர்

ஆரும் அறியார் அவன் பெருமை - ஓரும்

பொருள் முடிவு மித்தனையே எத்தவன்

செய்தார்க்கும்

அருள் முடிவ தாழியான் பால்"

வைணவ சமயத்தின் விசிஷ்டாத்துவைத சம்பிரதாயத்தில் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்னும் ஐவகை நிலைகள் சிறப்பாகப் பேசப் பெற்றுள்ளன. இந்த ஐந்து வகை வடிவங்களில் பக்தர்கள் நாராயணனை வழிபடுகின்றனர். ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் பரம்பொருளாகிய திருமாலின் இந்நிலைகளை ஆங்காங்கே சுட்டியுள்ளனர்.

ஆயினும் நம்மாழ்வார் இது குறித்த தத்தவச் சிந்தனைகளை மிகவும் விரிவாகப் பாடியுள்ளார்.

ஆன்மாவாகிய உயிர்

‘உயிர்’ என்பது ஆன்மா (Soul) மற்றும் மனம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளாகும். ‘ஆன்மா’, தானாக ஒளிரும்; இன்பம் தரும்; தூய்மையானது. ஆன்மாவை ஆயுதங்களால் கொன்றுவிட முடியாது. தீ, ஆன்மாவை எரிக்காது; நீர், அதை நனைத்துவிடாது காற்றினால் அதை உலர்த்த இயலாது. அது அழிவற்றது; நிலையானது’ என்று பகவத்கீதை கூறுகின்றது. வைணவ சம்பிரதாயத்தில் ஆன்மா பரம்பொருளை அடையும் நெறிமுறைகளாகக் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம், குருபக்தி ஆகியவை வலியுறுத்திக் கூறப் பெற்றுள்ளன.

வினைப்பயனை அனுபவிப்பதற்காக உயிர்கள் உடலுடன் பிறக்கின்றன. தம் முன்வினைப் பயன்களுக்கேற்ப உயிர்கள் மனிதர், தேவர், விலங்குகள், பறவைகள் என வெவ்வேறு உடல்கொண்டு பிறக்கின்றன உயிர்கள் அறிவுடையனவாயினும் அவை பெரும் மாயைக்குள் அகப்பட்டு, பரம்பொருளை மறந்து, இறைவனை அடைய முடியாமல் துன்புறுகின்றன. உயிர்களுக்குள் சத்துவம், இராசசம், தாமசம் என்னும் முக்குணங்கள் நிறைந்துள்ளன. இம் முக்குணங்களின் மயக்கத்தால் உயிர்கள் வினையில் மூழ்கிக் கிடப்பதால் அவை பரம்பொருளை அடைய முடிவதில்லை. வினைகள், பிறப்பு-&இறப்பு - மறுபிறப்புக்களுக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன. உயிர்கள் வாழ்க்கை என்னும் தலையில் சிக்கித் தவிக்கின்றன. வாழ்க்கைப்பற்று உயிர்களுக்கு அல்லும் பகலும் ஓயாது துன்பங்களைத் தருகின்றன. செல்வம், இளமை, யாக்கை ஆகியனவற்றின் நிலையாமைகளை உணர்ந்து உயிர்கள் இறைவனை நாடி இறைத்தளையை அறுத்து வீடுபேறு பெறலாம் என்று ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

“ஆழ்வார்கள் உயிர்க்கும் இறைவனுக்கும் இடையேயான சம்பந்தத்தை அம்சம் - அம்சீ, சேஷம் - சேஷீ, சரீரம் - சரீரீ, அவயம் - அவயவி என்னும் வடிவத்தில் காணுகிறார்கள்”

இதனைத் திருமழிசையாழ்வார், கடலில் எழும் அலைகள் மீண்டும் மீண்டும் கடலிற் குள்ளேயே அடங்கி விடுகின்றது. எவ்வாறு கடலலைகளுக்குத் தனிப்பட்ட நிலை இல்லையோ உயிர்களுக்கும் தனிப்பட்ட நிலை இல்லை. உயிர்களும் உயிரற்ற பொருட்களும் பரம்பொருளின் சரீரமாகவும் அவயங்களாகவும் அம்சங்களாகவும் விளங்குகின்றன எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

“தன்னுள்ளே திரைத்தெழும் தரங்க

வெண்தடங்கடல்

தன்னுள்ளே திரைத்தெழுந் தடங்குகின்ற

தன்மைபோல்

நின்னுள்ளே பிறந்திறந்த நிற்பவும் திரிபவும்

நின்னுள்ளே அடங்குகின்ற நீர்மை நின்கண்

நின்றதே”

என்பது திருமழிசையாழ்வாரின் பாசுரமாகும். விசிஷ்டாத்துவைதமும் ஆழ்வார்களின் இதே சிந்தனையையே வலியுறுத்துகின்றது. அம்ச ரூபமான உயிர் இறுதியில் அம்சீ ரூபமான பரம்பொருளில் ஒடுங்கும் என்பதை பொய்கையாழ்வார்,

“பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு உண்பூ

உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்

தருமனையே நோக்கும் ஒண்டாமரையாள்

கேள்வன்

ஒருவனையே நோக்கும் உணர்வு”

எனத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

‘அவித்தையை’ என்னும் மாயையில் சிக்கி உயிரானது தான் எதைச் செய்ய வேண்டும்; எதைச் செய்யக்கூடாது என்பதை அறியாமலிருக்கிறது. ஞானத்தினாலும் இறைவன் அருளாலும் இந்த மாயத்திரை அகன்று விட்டால் தான் பரம்பொருளின் அம்சம் என்பதை உயிர் உணர்ந்து கொள்ளும். உலக மாயையில் அகப்பட்டு உயிர் தன்னுடைய உண்மை ரூபத்தையும், எதிலும் எங்கும் அந்தர்யாமியாக வீற்றிருக்கும் இறைவனின் ரூபத்தையும் மறந்துவிட்டது. எம்பெருமானாகிய நாராயணன் கிருபையால் மட்டுமே உயிரானது மாயையிலிருந்து விடுபட முடியும் என்பதை நம்மாழ்வார்,

“இவையன்றே நல்ல; இவையன்றே தீய

இவையன்றிவை யறிய னேலும்

இவையெல்லாம்

என்னால் அடைப்பு நீக் கொண்ணாது

இறையவனே

என்னால் செயற்பால தென்”

எனத் தெளிவாகவே பாடியுள்ளார்.

ஆன்மாக்களைப் பக்தர், முக்தர், நித்தியர் என மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். உலக மாயையில் கட்டுண்டு உழன்று கொண்டிருப்பினும் வீடுபேற்றிற்குரிய நெறிகளில் ஈடுபட்டிருப்போரே ‘பக்தர்’ ஆவர். உலகில் பிறந்துழன்று பக்தர்களைப் போல் முயன்று இறைவன் திருவருளால் வீடுபேறு அடைந்தவர்களே ‘முக்தர்’ ஆவர். இவர்கள் மீண்டும் பிறவாமை என்னும் உயர்நிலையைப் பெற்றவர்கள் ஆவர்.

‘நித்தியசூரிகள்’ நித்தர் என்றழைக்கப் படுகின்றனர். இவர்கள் இந்த உலகத்தில் பிறக்காமலேயே அநாதி காலம் தொட்டு இறையின்பத்தில் திளைத்திருப்பவர்கள் ஆவர். இவர்களைப் ‘பெருமக்கள்’ என்றும், ‘பெருந்தேவர் குழாம்’ என்றும் நம்மாழ்வார் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார்.

மனிதப்பிறப்பு, பக்தி செய்து இறைவனை அடைவதற்கேற்ற உயர்பிறப்பாகும். உடல் அழியும். உடலில் உறையும் ஆன்மாவிற்கு அழிவு இல்லை. உயிர் அஞ்ஞானத்தின் காரணமாக மாயையில் சிக்கிப் பல்வேறு யோனிகளை அடைகிறது. உயிர் உய்வதற்கான ஒரேவழி ஹரியிடம் பக்தி கொள்வதாகும். இறை வழிபாட்டில் நாட்டம் கொள்ளாமல் உடலையே பிரதானமாகப் பேணிப் பாதுகாப்பதால் உயிர் வினைகளால் கட்டுண்டு துன்பத்தை அனுபவிக்கின்றது. எந்த உயிரும் எக்காலத்திலும் உலகத் துன்பத்தில் உழன்று கொண்டிருக்க முன்னமே படைக்கப்படுவதில்லை. உயிர் தம் வினைத்தளையை அறுத்து வீடுபேற்றினைப் பெறமுடியும் என்பதே ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் உணர்த்தும் செய்தியாகும்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பின்மீது படும் நீர்த்துளிகள் அந்த இரும்பின் வெப்பத்தால் ஈர்க்கப்படுவதைப்போல உயிரும் இறைவனிடமே ஒடுங்கிவிடும். உயிர் பரம்பொருளுக்கே உரியது. அவித்தை எனப்படும் ‘மாயை’ அல்லது அறியாமை உயிர்களை உணரவிடாமலும் அடைய முடியா மலும் தடுத்து நிறுத்துகின்றது. உயிர்களின் பிறப்பு இறப்புக்களுக்கு அவைகள் செய்யும் வினைகள் காரணமாகி விடுகின்றன. ஆன்மா அழிவற்றது. தான் செய்த வினைப்பயனை அனுபவிப்பதற்கு அது உடலுடன் ஒட்டி இந்த உலகத்தில் மறுபிறப்புக் கொள்கின்றது.

## பிரபஞ்சமாகிய உலகம்

சிலந்தி வலையைப் பின்னுவதைப் போன்று நாராயணன் அண்ட சராசரங்கள் அனைத்தையும் 'சிருஷ்டி' என்னும் படைப்பினைச் செய்கின்றான். பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் பொருட்களிலும் உயிர்களிலும் அவன் உள்ளிருந்து உலகம் என்னும் பம்பரத்தை ஆட்டி வைக்கின்றான். உலகமே இறைவனின் ஆன்மா உறையும் உடலாகின்றது. 'குடம்' ஒன்றைச் செய்வதற்குக் குயவன், மண், சக்கரம், நீர் ஆகியவை தேவைப்படுகின்றன. குயவன் முதற்காரணமாகவும் மண் இரண்டாவது காரணமாகவும் சக்கரமும் நீரும் மூன்றாவது காரணமாகவும் அமைகின்றன. இறைவன் பிரபஞ்சத்தைப் படைப்பது முதல் வகை; அது அவனே தன் தொப்புழில் படைத்த நான்முகன் வாயிலாக உலகங்களைப் படைக்கச் செய்வது. அந்த நான்முகனுக்கு மூலப்பிறப்பிடம் நாராயணன் ஆவான். உலகங்களும் உயிரினங்களும் தோன்ற நாராயணனே மூவகைக் காரணங்களாக இருப்பதை நம்மாழ்வார் தெளிவாகப் பாடியுள்ளார்.

"யாவகையுலகமும் யாவரும் இல்லா

மேல்வரும் பெரும் பாழ்க்காலத்து

இரும்பொருட் கெல்லாம் அரும்பெறல்

தனிவித்து

ஒருநாள் ஆகித் தெய்வ நான்முகக்

கொழுளை ஈன்று

முக்கண் ஈசனொடு தேவுபல நுதவி

மூவுலகம் விளைத்த உந்தி

மாயக் கடவுள் மாமுதலடியே?"

என்பது அப்பாசுரமாகும். உலகத் தோற்றத்துக் காரணமாக இருக்கும் பரம்பொருளை வணங்க வேண்டும் என்பதே இப்பாசுரத்தின் பொருளாகும். இறைவனாகிய நாராயணனே உலகமாகவும் உலகிற்கே உயிராகவும், கண்களுக்குப் புலப்படாத அருவமான பொருட் களின் ஆத்மாவாகவும் இருப்பதை நம்மாழ்வார்,

"உலகில் திரியும் கருமகதியாய் உலகமாய்

உலகுக்கே ஓர்உயிரும் ஆனாய்!

புறஅண்டத்து

அலகில் பொலிந்த திசை பத்தாய்

அருவேயோ"

என்று கூறியுள்ளார். நாராயணனும் உலகமும் பிரிக்க முடியாதவை என்று திருமழிசை யாழ்வார் பாடுகின்றார்.

"நீயே யுலகெல்லாம் நின்னருளே

நிற்பனவும்

நீயே தவத் தேவதேவனும் - நியே

எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும்

அண்டத்து

இருசுடரும் ஆய இவை"

என்பது அப்பாசுரமாகும். ஆழ்வார்கள் அனைவரும் உலகத்தை மெய்யென்றும் நித்தியமென்றும் பாடியுள்ளனர். ஆதி சங்கரர் உலகத்தைப் பொய்யென்றும் அநித்தியம் என்றும் மாயாவாதம் பேசினார். இதனைக் கண்டனம் செய்த பிற்காலத்து ஆச்சாரியர்கள் அனைவரும் ஆழ்வார்களுடைய சிந்தனைகளையே ஏற்றனர். பரம்பொருளாகிய நாராயணன் மட்டுமே உலகம் தோன்றுவதற்கு நிமித்தக் காரணமாகவும் துணைக்காரணமாகவும் இருக்கின்றான். ‘சிருஷ்டி’ என்பது உண்மை; இந்த உலகம் நாராயணனின் லீலைகள் நிறைந்த பூமியாகும். நாராயணனே இந்த உலகத்தை இயக்குகின்றான். அனைத்துப் பிரபஞ்சமும் உயிரினங்களும் அவனுக்குட்பட்டு அடங்கும். நிலம், நீர், தீ, காற்று, சூரியன், சந்திரன் மற்றும் விண்ணில் காணப்பெறும் ஒளிமிகுந்த பொருட்களும் எம்பெருமானுக்குள் அடங்குகின்றன. பிரளய காலத்தில் நாராயணன் இவற்றையெல்லாம் தன் வயிற்றில் மறைத்துக் கொண்டு ஒரு சிறிய ஆலிலைமீது பள்ளிகொண்டிருந்தான். திருமால் விரிந்த ஞாலமெல்லாம் ஒடுங்குவதற்குரிய இடமாயிருக்கின்றான் என்று பிரபஞ்சமாகிய உலகத்திற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை,

“நிலநீர் தீ கால் சுடரிரு விசும்பும்

மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க

ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும்

அகப்படக்கரந்து ஓர் ஆலிலைச் சேர்ந்த

எம்பெரு

மானையல்லது

ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே?”

என்று நம்மாழ்வார் பாடுகின்றார்.

நிலையற்ற இந்த உலக வாழ்க்கையில் எவரும் சிரஞ்சீவியாக இருந்துவிட முடியாது. அனைவரும் ஒருநாள் மரணித்தே ஆக வேண்டும். இந்த லீலை விநோதங்களைச் செய்யும் நாராயணனே உலகமாகவும், உலகத்திற்கே உயிராகவும் இருக்கின்றான். உலகம் என்னும் பம்பரத்தை அவன் ஆட்டி வைக்கின்றான். இந்த உலகம் அவன் உடலாக இருக்கின்றது.

## பொய்த்தோற்றமாகிய மாயை

உலக மக்கள் பொய்த்தோற்றத்தையே ‘மாயை’ என்று கருதுகின்றனர். ஆயினும் நாராயணனால் தோற்றுவிக்கப்பட்ட மாயை மிகவும் சக்தி வாய்ந்ததாகும். இந்தச் சக்திமிக்க மாயையில் சிக்கும் உயிர் மிகுந்த துன்பத்தை அனுபவிக்கின்றது. பகவத் பக்தியினால் மட்டுமே மனிதன் இந்த மாயையிலிருந்து வீடுபேறு பெற முடியும். நாராயணன் மாயைக்கு உட்பட்டிருப்பதில்லை. மாயையில் சிக்கிய மனிதன் மட்டுமே உலகப் பந்தங்களில் கட்டுண்டு கிடக்கின்றான். நாராயணன் உலக மக்களுக்கு மயக்கங்கள் ஏற்படும்படி பல்வேறு மாய விளையாட்டுக்களைச் செய்து விடுகின்றான்[20] என்கின்றார் நம்மாழ்வார்.

மாயையானது உயிர்களைப் பிரமையில் ஆழ்த்தி உலகப் பற்று என்னும் ஆசையில் வீழ்த்தி, அவர்கள் மனத்தில் அஞ்ஞானத்தை ஏற்படுத்துகின்றது. இந்த அஞ்ஞானம் என்னும் மாயையில் காரணமாக உயிர்கள் சுகம், துக்கம், மோகம், ராசதுவேசம், காமம், குரோதம், ஆணவம், காழ்ப்புணர்ச்சி ஆகிய தீய உணர்வுகளுக்கு ஆட்பட்டு, பிரமையில் மூழ்கிக் கிடக்கின்றன. அஞ்ஞானத்தின் காரணமாக உயிர் தனது உண்மையான சுயரூபத்தை மறந்துவிடுகின்றது. இதனை நம்மாழ்வார்,

“யானே என்னை அறிய கிலாதே

யானே என் தனதே என்று இருந்தேன்

யானே நீ என்னுடைமையும் நீயே”

எனப் பாடுவதிலிருந்து அறியலாம். மமதை, மோகம், பேராசை, காமம் என்பன சத்தியத்தை மறக்கச் செய்யும் மாயையின் பல்வேறு வெளிப்பாடுகளாகும். இடைவிடாத பக்தியாலும், வைராக்கியத்தினாலும், நாராயணனின் திருபையினாலும் மட்டுமே மனிதன் இந்த மாயையின் பிடிப்பிலிருந்து விடுபட இயலும்.

மாயை மிகுந்திருக்கும் உலகத்தில் தீயவர்கள் இன்பத்தையும், நல்லவர்கள் துன்பத்தையும் அனுபவிக்கின்றார்கள். பகைவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள். இது என்ன நியதி? என நம்மாழ்வார் வினாத் தொடுக்கின்றார். மாயையில் அகப்பட்டுப் பல்வேறு பாவங்களைச் செய்ததாகத் திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

"பற்றேல் ஒன்றுமிலேன்; பாவமேசெய்து

பாவியானேன்

மற்றே லொன்றறியேன் மாயனே! எங்கள்

மாதவனே!

அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை

ஆட்கொண்டருளே"

யாதொரு பற்றுக்கோடுமில்லாமல் இங்கு மங்கும் வீணாக அலைந்து திரிந்து பாவங்கள் பல செய்து பாவியானேன். மயக்கத்துடன் நின் திருவடிகளில் சரணடைகின்றேன். மாயை யிலிருந்து விடுவித்து என்னை ஆட்கொள் என்று திருமங்கையாழ்வார் திருமாலிடம் முறையீடு செய்கின்றார். மேலும் அவர் பெண்ணின்பத்திலிருந்து விடுபடுவதே மாயையிலிருந்து விடுபம் வழி என்கின்றார். தாய், தந்தை, மனைவி, மக்கள் மீது கொண்ட மோகத்தின் மிகுதியால் / அவர்களது உறவு உண்மையான உறவு என நினைத்துத் தான் துன்பப்பட்டதாகக் கூறும் திருமங்கையாழ்வார், மானைப்போன்ற கண்ணுடைய பெண்களின் காம மயக்கத்தில் ஆட்பட்டு நரகத்தில் வீழ்ந்து பல்வேறு தீமைகளைச் செய்ததாகக் கூறுகின்றார்.

அப்பாடல் வருமாறு:

"தாயேதந்தை யென்றும் தாரமே நினைவு

மக்களென்றும்

நோயே பட்டொழிந்தேன்

மானேய்கண் மடவார் மயக்கில்பட்டு

மாநிலத்து

நானே நானாவித நரகம்புகும் பாவம்

செய்தேன்"

நம்மாழ்வார், திருமால் வாமனனாய் அவதரித்து உலகத்தை அளந்தான். அவன் தோற்றுவித்த அந்தப் பெரிய மாயை காரணமாக நான்பல பிறவிகள் எடுத்துத் துன்பப்படுகின்றேன். உன்னுடைய மாயையிலிருந்து என்னை விடு விக்க என்னுடைய தொன்மையான வல்வினைத் தொடர்களை வேறுத்து உன்திருவடிகளில் என்னைச் சேர்க்க அருள்செய்24 எனத் திருமாலிடம் வேண்டுகின்றார். மாயையில் சிக்கித் தவிக்கும் மனிதர்களுக்குத் திருமால் அகப்படாதவனாக இருக்கின்றான் என்பதைத் திருமழிசையாழ்வார்,

"மண்ணுளாய் கொல்? விண்ணுளாய் கொல்?'

மண்ணுளே மயங்கி நின்று

எண்ணும் எண்கைப் படாய் கொல்? என்ன

மாயை?"

எனப்பாடுகின்றார். உயிர்களைப் படைத்த நாராயணன் அவ்வுயிர்கள் நல்வழியில் செல்லாததால் அவர்களைத் தான் தோற்று வித்த மாயையில் ஒடுங்கச் செய்தான். அவனது செயல்கள் அனைத்தும் மாயையாகத் தோன்று வதாக திருமழிசையாழ்வார் கூறுகின்றார்.

சங்கராச்சாரியார் மாயையை 'பிரமை' என்றார். அனால் வல்லபாச்சாரியார் அதனை நாராயணனின் சக்தி வடிவம் என்றார். வல்லாபாச்சாரியார் மாயை வித்யா மாயை, அவித்யா மாயை என இருவகையாகக் கூறினார். இறைவனால் தூண்டப்பட்ட இவ்விரு மாயைகளும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. வித்யா மாயை பக்தனின் உள்ளத்தில் வைராக்கியத்தைத் தோற்றுவிக்கின்றது. அவித்யா மாயை மனிதனை உலகப் பற்றுக்களில் வீழ்த்துகின்றது. அவித்யா மாயை யானது உயிர்களைத் தான் இறைவனின் அம்சம் என்பதையே மறக்கச் செய்கின்றது. இதனால் மனிதன் மோகத்தில் மூழ்குகின்றான். வித்யா மாயை இதற்கு நேர்மாறானது. அது மனிதனின் அஞ்ஞானத்தை அழிக்கின்றது.

## 'வீடுபேறு' என்னும் மோட்சம்

பரம்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனின் இருப்பிடமாகிய பரமபதம் அல்லது வைகுண்டம் அல்லது சொர்க்கவாசல் சென்று அங்குள்ள இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே 'வீடுபேறு' , 'முக்தி' மோட்சம்' என வைணவத்தில் கொள்ளப்படுகின்றது. இதற்கான விதிமுறைகளைக் கடைப்பிடித்து எம்பெருமானின் திருவருளைப் பெற்ற இறையன்பர்கள் மட்டுமே பரமபதமாகிய மோட்சத்தை அடைய முடியும். பிறப்பு இறப்பு என்னும் சக்கரத்திலிருந்து விடுதலை பெற்று பரமபதம் செல்லும் ஆன்மா மீண்டும் மண்ணுலகில் பிறப்பதில்லை. எனவே பரமபதத்தை 'மீளா உலகம்' என்கின்றனர். பிரளய காலத்தில் கூட இவர்களுக்கு அழி வில்லை. பரமபதம் பெற்ற ஆன்மா பேரானந்தத்தை அனுபவிக்கின்றது.

மானுடப்பிறவி மட்டுமே இறைவனாகிய திருமால்மீது பக்தி செலுத்தி மோட்சம் பெறுவதற்குத் தகுதியுடையதாகக் கருதப் படுகின்றது. பரம்பொருளான ஸ்ரீமத் நாராயணன் மட்டுமே பரமபதத்தை தரும் கடவுள் என்று வைணவ சமயம் கூறுகின்றது. பகவத் பக்திவாயிலாக மோட்சத்தைப் பெறுவதற்கும், பகவானின் அனுக்கிரகம் வேண்டும். "சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுஜ்யம் ஆகிய நான்குவகை முக்திகள் ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்பெற்றள்ளன" [26] இந்த வகையான முக்திகளின் விளக்கங்கள் ஆழ்வார்கள் பாசுரங்களில் கூறப்படவில்லை. ஆயினும் இவற்றை ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடியுள்ளனர். உயிர் உடம்பைவிட்டு நீங்காது உடம்புடன் குடியிருக்கும் போதே வைகுண்ட இன்பத்தை விடக் கூடுதல் இன்பத்தை அனுபவிக்கும் நிலையை 'சீவன் முக்திநிலை' என்கின்றனர். இந்த இன்பத்தை இறந்தபின் கிடைக்கும் இன்பத்தைவிட மேலானதாக ஆழ்வார்கள் கூறுகின்றனர். சான்றாக நம்மாழ்வார்,

"ஒன்றுண்டு செங்கண்மால்! யானுரைப்பது

உன்னடியார்க்

கென்செய்வன் என்றே யிருத்தி நீ நின்புகழில்

வைகும்தம் சிந்தையிலும் மற்றினிதோ

நீயவர்க்கு

வைகுந்த மென்றாளும் வான்?"

எனப்பாடுவதைக் கூறலாம். வைகுந்த மோட்ச இன்பத்தைக் காட்டிலும், திருமாலைத் தியானம் செய்து கொண்டிருப்பதில் கிடைக்கும் இன்பம் மேலானது என்பார் நம்மாழ்வார். திருமாலடியவர்கள் தங்களது ஆன்மா உருகிக் கரையுமாறு இறைவனைத் தியானித்துத் தம் பக்திப் பெருக்கால் ஏற்படும் அமுதத்தைப் பருகுவதையே பெருமையாகக் கொள்கின்றார்கள். இத்தகைய திருமாலன்பர்கள் செல்வ

வாழ்க்கை, அரசவாழ்க்கை, மோட்சம் ஆகியன வற்றைக்கூட அடைய விரும்பமாட்டார்கள். இவர்களுடைய இறைபக்தியில் இன்புறுவதே ஆகும். தொண்டரடிப்பொடியாழ்வார் திருமால் திருநாமத்தின் கீர்த்தி இந்திர லோகத்தைவிடப் பெரியது என்கின்றார்.

"பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே
என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோக
மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா
நகருளானே"

நான் தெய்வலோகத்தையும் சிவ லோகத்தையும் இந்திரலோகத்தையும் அடைய விரும்பவில்லை. உன்னைக்கூட வேண்டு மென்ற ஆசையே எனது விருப்பம் என்று திருமழிசையாழ்வாரும் கூறியுள்ளார். அவர் இந்தப் பாடலில் தான் சாயுஜ்யமுக்தியை அதாவது திருமாலோடு ஒன்றறக்கலத்தல் என்பதைத் தெளிவுபடக் கூறியுள்ளார். நம்மாழ்வார் உலகப் பற்றைத் துறந்த பின்னரே ஆன்மா மோட்ச இன்பத்தை அனுபவிக்க முடியும்29 என்கின்றார். இறைவனுடன் எவ்வாறு ஒன்றறக் கலக்க வேண்டும் என்பதைத் திருமங்கையாழ்வார் தக்க உவமையைக் காட்டி விளக்கியுள்ளார்.

"இரும்பனன்றுண்ட நீர்போல்
எம்பெருமானுக்கு என்தன்
அரும் பெறலன்பு புக்கிட்டு அடிமைபூண்டு
உய்ந்து போனேன்"

இறைவனுக்கு அருகாமையில் இருப்பதே சாமீப்ய முக்தியாகும். இதனைக் குலசேகர ஆழ்வார்,

"ஊனேறு செல்வத்து உடல்பிறவி யான்
வேண்டேன்
ஆனேறழ் வென்றால் அடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"

என்னும் பாசுரத்தில் விளக்கியுள்ளார்.

குலசேகராழ்வார் திருமலையாகிய திருவேங்கடத்தில் செண்பக மரமாகத் தான் வளர்ந்து மலர்களைத் தந்து எம்பெருமானுக்குத் தொண்டு செய்ய விழைகின்றார். வைகுண்டத்தை அடை வதற்குத் தடையாக இருக்கும் தனது உடலைத் திருமழிசையாழ்வார் நோயாகக் கருதுகின்றார்.

## முடிவுரை

பரம்பொருள், உயிர், உலகம், மாயை, மோட்சம், பரத்துவம், வியூகம், விபவம், அந்தர் யாமித்துவம், அர்ச்சைநிலை ஆகிய திருமாலின் ஐவகை நிலைகள் ஆகியன குறித்த ஆழ்வார்களின் வைணவ சமயத் தத்துவ வெளிப்பாடுகள் ஆழ்வார்களின் வைணவ வேதமாகிய நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களைக் கொண்டு இவ்ஆய்வுக் கட்டுரையில் விளக்கப் பெற்றுள்ளன.

## References

Aacharya, P.S., (1957) Divya Prabandhasaram, Amutha nilayam, Chennai, India.
Aacharya, P.S., (1962) Devotee who raised the Lord - Alwars and Priests, Kalaimagar Kariyalayam, Chennai, India
Annankaracharyar, (1960) Naalayira Divya Prabandham, Kirantha mala Office, Kanchipuram, India
Ethirajulu Naidu, G., (1963) Vaishnava poonga, Bakthan Kariyalayam, Chennai, India
Jagathrakshakan, S., (2002) Naalayira Divya Prabandham, Alwar research centre, Chennai, India.
Kamalakanna, R.V., (2004) Naalayira Divya Prabandham Moolamum Uraiyum, 9 Volumes, Varthamanan pathippagam, Chennai, India.
Purusothama Naidu, (1972) Eetin Tamilakam, Madras University, Ten Volumes, Chennai, India.
Rajagopalan, T.S., (1972) Vaishnava Priests, Star Press, Chennai, India
Srinivasa Iyyangar, S.R., (1992) HIsotry of Alwars, Swadesamitran Office, Chennai, India
Srinivasachari, P.N., (1978) Philosophy of Vistatvaita, Annamalai University, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)
© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License